



**INDIAN MENOPAUSE SOCIETY**
**POETRY WRITING- TAMIL**

# மாதவிடை (மாதவிடாய்)

உனது வரவு எண்ணி கலங்கி நின்றேன்
எனது வாழ்வு மாறிடும் என்றிருந்தேன்
உந்தன் தரவுகள் பல கேட்டறிந்தேன்
உன்னை சந்திக்க நேரிடுமோ என பயந்திருந்தேன்

செங்கடல் நிற்க வெப்பச்சலன சூறாவளி வந்தது
வறண்ட பாலைவனத்தில் நித்திரை பறந்தோடியது
வேறெண்ணவென்று எண்ணி நிற்க
வேதனை கண்ணிர் சுரந்தது என்னுள் வார்த்தைகள் இல்லை

மனதில் படபடப்பும் தீராகவலையும் பக்கம்சாய
என்புகள் தேய இதயங்கள் நோக
திகிலூட்டும் இவை அனைத்தும் எத்தனை ஆண்டுகளோ?

இதுவும் கடந்து போகும் காரிகையே
எதுவும் வென்று போகும் தாரகையே
இன்னிலை ஒவ்வொரு பாவைக்கும்; தயங்காதே
மீண்டும் பூப்பாய் உலகின் நாயகியாய் அஞ்சாதே!!!



**DR . A. GEETHALAKSHMI**
**CHENNAI MENOPAUSE SOCIETY**
**– Life member**
**IMS MEMBER**
CHENNAI